# வெண்பன்றி வளர்ப்பு

### பன்றி வளர்ப்பின் நன்மைகள்

- பன்றிகளை வசதிக்கேற்ப எந்த சூழ்நிலையிலும் வளர்க்கலாம்
- ஒரு வருடத்திற்கு இரு முறை குட்டி ஈனும் தன்மை கொண்டது
- பன்றிகள் வேகமாக வளரும் திறன் கொண்டது
- எளிதில் கிடைக்கக்கூடிய சாதனங்களைக் கொண்டு கொட்டகை போடலாம்
- விடுதி மற்றும் சமையற்கூட கழிவுகளை பன்றிகளுக்கு தீவுனமாக கொடுத்து வளர்க்கலாம்
- பன்றிகளிலிருந்து கிடைக்கும் தோல் மற்றும் கொழுப்பு பொருட்கள் அதிக விலைக்கு விற்கலாம்

### பன்றி இனங்கள்

| இனம் | நாடு |
|---|---|
| பெரிய வெள்ளை யார்க்ஷயர் | இங்கிலாந்து |
| நடுத்தர வெள்ளை யார்க்ஷயர் | இங்கிலாந்து |
| லாண்டரேஸ் | வடக்கு ஐரோப்பா |
| பெர்க்ஷயர் | இங்கிலாந்து |
| டாம்வொர்த் | இங்கிலாந்து |
| டுயூராக் | அமெரிக்கா |

### தேர்வு செய்தல்

- வெண் பன்றிகளைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அதிக பிறப்பு எடை மற்றும் உயரிய இனத்திலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.
- ஆண் பன்றிகளை ஒரு ஈனலில் அதிக எண்ணிக்கை குட்டிகளை ஈன்ற தாயிடமிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.
- இணப்பெருக்கத்திற்கான தேர்வு மூன்றாக பிரிக்கப்படுகிறது. அவை ஆண் பன்றித் தேர்வு, பெண் பன்றித் தேர்வு மற்றும் பெண் பன்றிகளை கழித்தல்
- ஒரே மாதிரியான தீவனம் மற்றும் பராமரிப்பு கொண்டவைகளாக இருத்தல் வேண்டும்
- இனப்பெருக்கத்திற்கான பெண் பன்றிகளை விற்பனை எடையில் (90 கிலோ) தேர்வு செய்ய வேண்டும்
- ஆண் பன்றியின் தாய் அதிக குட்டிகளை (எட்டுக்கு மேல்) ஈனுவதாக இருக்க வேண்டும்

- ஆண் பன்றிகள் 5-6 மாத வயதில் சுமார் 90 கிலோ உடல் எடை பெறுபவையாக இருக்க வேண்டும்.
- உடல் நீண்டும், ஆழ்ந்தும் இருப்பதுடன் முதுகு மற்றும் தொடை தசைகள் உறுதியாகவும், கால்கள், குழம்புகள் மற்றும் எலும்புகள் நன்கு வளர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்
- முதுகுக் கொழுப்பின் தடிப்பு, பெட்டையில் 4 செ.மீ.க்கு குறைவாகவும் ஆண் பன்றிகளில் 3.2 செ.மீ.க்கு குறைவாகவும் இருத்தல் வேண்டும்.
- பன்றிக் காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி போடப்பட்ட பன்றிகளை வாங்க வேண்டும்

**வெண்பன்றி பண்ணை வீடு**

பண்ணை வீடு மேட்டுப்பாங்கானதாக நீர் தேங்காமல் மழையால் பாதிப்பு இல்லாமல் அதிக சூரிய வெப்பம் இல்லாமல் நல்ல காற்றோட்ட வசதியுடன் வெளிச்சம் உள்ள இடமாக அமைதல் வேண்டும். விற்பனைக்காக எளிதாக போக்குவரத்து வசதி, மின்சார வசதி மற்றும் நல்ல குடிநீர் வசதி ஆகியவை மனதில் கொண்டு பண்ணை அமைவிடத்தை தேர்வு செய்தல் வேண்டும். பண்ணை வீடு மற்ற கால்நடை பண்ணையிலிருந்து குறைந்தது 200-400 அடி தூரம் இருக்க வேண்டும். பெட்டைப் பன்றிகளுக்கு தனி இடவசதி, குட்டி ஈனாத பன்றிகள், கன்னிப் பன்றிகள், ஈனும் பன்றிகளும், இறைச்சிக்காக வளர்க்கப்படும் பன்றிகளுக்கு என தனிப் பண்ணை வீட்டுபிரிவுகள் இருக்க வேண்டும். பக்கவாட்டு சுவர் 1 மீட்டர் உயரத்திற்கு கட்டப்பட வேண்டும். அதற்கு மேல் 1.5 மீட்டர் திறந்த வெளியாக விட்டுவிட வேண்டும். இதற்கு மேல் துத்தநாகத் தகடு, சிமெண்ட் ஓடு அல்லது சீமை ஒடுகள் கொண்டு கூரையினை அமைக்கலாம்.

| பருவங்கள் | இடமளவு |
|---|---|
| வளரும் பன்றிகள் | 10-20 சதுர அடி |
| பருவம் அடைந்த பன்றிகள் | 20-30 சதுர அடி |
| கிடா பன்றி | 65-80 சதுர அடி |

**இனப்பெருக்கம்**

பன்றிகள் 6-8 மாதங்களில் பருவமடைந்து இனப்பெருக்கத்திற்கு தயாராகிவிடுகின்றன. பன்றிகள் சினைக்காலம் 114 நாட்கள். வருடத்திற்கு இரண்டு முறை குட்டிகள் ஈனும். ஒவ்வொரு முறை ஈனும் பொழுதும் 10 முதல் 12 குட்டிகள் வரை கிடைக்கும். சினைப்பருவக்காலம் 2 முதல் 3 நாட்கள் வரை இருக்கும். இக்காலத்தில் முதலிரண்டு நாட்கள் பெண் பன்றிகள் ஆண் கிடா பன்றியுடன் இனச்சேர்க்கைக்கு அனுமதிக்க வேண்டும்.

சினைப் பன்றிகள் குட்டிகள் ஈனுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பே தனியாகப் பிரித்து பராமரிக்க வேண்டும். அறையை சுத்தமாகவும், வைக்கோல் தட்டை போன்றவற்றைப் பரப்பி சிறிது வெப்பமான நிலை இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். காம்புகளில் பால் கறந்த 24 மணி நேரத்திற்குள் பன்றி குட்டிகளை ஈன்றுவிடும். 2 முதல் 6 மணி நேரம் வரை எல்லாக் குட்டிகளையும்

ஈன்றுவிடும். குட்டி ஈன்ற பிறகு தாய் பன்றிற்கு 15 மணி நேரங்களுக்கு உணவு தேவையில்லை. ஆனால் குடிநீர் கண்டிப்பாக இருக்க வேண்டும். பின், சிறிது சிறிதாகத் தீவனம் கொடுத்து இரண்டு வாரங்களில் முழுத் தீவனம் கிடைக்க செய்ய வேண்டும்.

**பன்றிக் குட்டிகள் பராமரிப்பு**

- குட்டிகள் பிறந்தவுடன் தானாகவே எழுந்து பால் குடிக்க ஆரம்பித்துவிடும்
- குட்டிகள், தாய்ப்பன்றியுடன் முதல் இரண்டு மாதங்கள் வளர்க்க வேண்டும்
- இரண்டு வாரங்கள் முடிந்தவுடன் பன்றிக் குட்டிகள் தாயுடன் சேர்த்து தீவனத்தை உட்கொள்ளத் தொடங்கும்
- இரண்டு மாதங்களுக்குப் பிறகு பிரித்து தனித்தனிக் குழுக்களாக வளர்க்க வேண்டும்
- தாய்ப்பன்றியிலிருந்து பிரிக்கும்பொழுது குட்டிகளை குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.

**தீவனம்**

| **தீவனம்** | **கொடுக்க வேண்டிய அளவு** | **நன்மைகள்** |
|---|---|---|
| அடர் தீவனம் | 2-3 கிலோ | சமச்சீரான வளர்ச்சி, அதிக உடல் எடை, குட்டிகள் ஈனும் திறன் அதிகரிப்பு |
| சமையல் கூட விடுதி, உணவுக்கூடம் மற்றும் அங்காடி கழிவுகள் | உண்ணும் அளவு | பன்றிகள் வளர்ப்பில் தீவுனச் செலவு குறைவதுடன் உற்பத்தி செலவு குறையும். தேவையான உயிர்ச்சத்துக்கள்,தாது உப்புகள் மற்றும் நார்ச்சத்து கிடைக்கப்பெற்று சமச்சீரான வளர்ச்சி உண்டாகும் |
| பசுந்தீவனம் (குதிரை மசால், சூபாபுல், வேலி மசால் போன்ற பயிறு வகைகள்) | உண்ணும் அளவு | நார்ச்சத்து கிடைப்பதுடன் புரதச்சத்து, இரும்பு மற்றும் சுண்ணாம்பு சத்து கிடைக்கும். மனிதனுக்கு தேவைப்படும் தானியங்களின் பயன்பாடு பன்றிகள் தீவனத் தயாரிப்பில் குறையும் |

**அடர்தீவன வகைகள்**

| **மூலப்பொருட்கள்** | **குட்டி தீவனம்** | **வளரும் பன்றிகளுக்கான தீவனம்** | **வளர்ந்த ஆண், பெண், சினை, பாலூட்டும் பன்றிகளின் தீவனம்** |
|---|---|---|---|
| மக்காச்சோளம் | 60 | 50 | 50 |
| கோதுமை | 14 | 20 | 18 |
| கடலைப் | 14 | 18 | 20 |

| | | | |
|---|---|---|---|
| பிண்ணாக்கு | | | |
| வெல்லப்பாகு | 5 | 5 | 5 |
| மீன்தூள் | 5 | 5 | 5 |
| தாதுக் கலவை | 1 | 1.5 | 0.5 |
| உப்பு | 1 | 0.5 | 1.5 |

வெண்பன்றிகளுக்கு உயிர்ச்சத்துக்களான ரைபோ.ஃ.பிளேவின், நியாசின், பாண்டோதெனிக் அமிலம், பி12 மற்றும் உயிர்ச்சத்து 'ஏ' மற்றும் 'டி' ஆகியவை கண்டிப்பாக கொடுக்க வேண்டிய உயிர்ச்சத்துப் பொருட்களாகும். பொலி கிடா பன்றிக்கு 40 லிட்டர் தண்ணீரும், தாய்பன்றிற்கு 20 லிட்டரும், இளம் பன்றிகளுக்கு 5 லிட்டரும் நல்ல சுத்தமான குடிநீர் அளிக்க வேண்டும்.

**நோய்ப்பிரச்சனைகளும் தடுப்பு முறைகளும்**

- பன்றிக் குட்டிகளுக்கு இரத்தச் சோகை நோய், ஊட்டச்சத்து குறைவால் ஏற்படும். இரும்புச் சத்து மற்றும் தாமிரச் சத்தும் தேவையான அளவு கிடைக்கச் செய்ய வேண்டும்
- குட்டிகள் தாயிடமிருந்து பிரித்து பதினைந்தாவது நாளில் குட்டிகளுக்குக் குடற்குழு நீக்கம் செய்ய வேண்டும்
- பன்றிகளை நல்ல சுத்தமான காற்றோட்டமுள்ள கொட்டகையில் வளர்க்க வேண்டும்
- சரிவிகித தீவனம் கொடுத்தல் அவசியம்
- தண்ணீர், தீவனத் தொட்டி மற்றும் குட்டி போடும் அறைகள் சுத்தமாக இருக்க வேண்டும்
- கோமாரி நோய்க்கு தடுப்பூசி போட வேண்டும்.